போக்குவரத்து துறை

அனுப்புநர்

திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப.,
போக்குவரத்து ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.

பெறுநர் (மின்னஞ்சல் மூலமாக)

அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்கள்,
தமிழகம் முழுவதும்.

ந.க.எண் 22299/க3/2014 நாள் 11-08-2014.

அய்யா,

பொருள்: போக்குவரத்து துறை – மோட்டார் வாகனம் - மாற்று திறனாளிகளுக்கான வாகனம் (Alteration) நடவடிக்கை எடுத்தல் - சில அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1) திரு. எஸ். பாலாஜி, வேளச்சேரி, சென்னை-42 அவர்களின் கடிதம் நாள் 10.04.2014.

2) அரசு சார்புச் செயலர், உள் (போ.வ.I) துறை, சென்னை அவர்களின் கடிதம் எண் 24915/போ.வ.I/2014-1, நாள் 16.04.2014 மற்றும் 30.06.2014.

3) Letter No. RT-11012/12/2001-MVL, dated: 23.07.2008 from the Ministry of Road Transport and Highways, New Delhi.

4) Letter No. RT-11012/12/2001-MVL, dated: 16.09.2009 from the Ministry of Road Transport and Highways, New Delhi.

5) Letter No. RT-11017/07/2011-MVL, dated: 05.05.2011 from the Ministry of Road Transport and Highways, New Delhi.

--------

மாற்றுத் திறனாளிகள் இருசக்கர வாகனங்களை தாங்கள் இயக்குவதற்கு ஏற்றாற்போல் உரிய வகைமாற்றம் செய்து ஓட்டுநர் உரிமம் பெற வட்டார போக்குவரத்து அலுவலகங்களை அணுகும்போது தாங்கள் சிரமங்களுக்கு உள்ளாவதாக போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு அவ்வப்போது புகார் அளித்தவண்ணம் உள்ளனர்.

மாற்றுத் திறனாளிகள் இருசக்கர வாகனங்களை இயக்குவதற்கு ஏற்றாற்போல் உரிய வகைமாற்றம் செய்வது தொடர்பாக 1988ஆம் வருட மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 52(1)ல் வழங்கப்பட்டுள்ள விதிவிலக்கின் அடிப்படையில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், புதுடில்லி உரிய வழிமுறை அடங்கிய தீர்மானத்தினை தீர்மான எண் RT-11012/12/01-MVL நாள் 23.07.2008ல் நிறைவேற்றியது.

இதன்படி இருசக்கர வாகனங்களை மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்த, மத்திய மோட்டார் வாகன விதிகள் 1989, விதி 126ன்படி Authorized Testing Agencyகளால் சோதனை செய்து சான்றிதழ் வழங்கப்பட்ட (Retrofitment Kits)களை மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகளில் (Authorized Workshops) மட்டுமே பொருத்தி பயன்படுத்தவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், தற்போது இருசக்கர வாகனங்களைப் பொருத்தவரைஅரசு ஆணை எண் (2D) எண் 6, உள் (போ.வ.1) துறை, நாள் 10.01.2011ன்படி TVS நிறுவனம் மட்டுமே மேற்கண்ட நடைமுறைகளை பின்பற்றி வாகனங்களை தயாரித்து வருகிறது. எனவே மேற்படி T.V.S.நிறுவன வாகனங்கள் மட்டுமே வட்டாரப்போக்குவரத்து அலுவலகங்களால் பதிவு செய்யப்பட்டு ஒட்டுநர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், புதுடில்லி தீர்மான எண் RT-11017/07/2011-MVL நாள் 05.05.2011ன்படி, மாற்றுத் திறனாளிகள் இருசக்கர வாகனங்களை தாங்கள் இயக்குவதற்கு தகுந்தாற்போல உரிய வகை மாற்றம் செய்ய (TVS நிறுவன தயாரிப்பு வாகனங்கள் நீங்கலாக - இதர நிறுவன இருசக்கர வாகனங்களுக்கு) தமிழக அரசால் அங்கீகிக்கப்பட்ட பணிமனைகள் இல்லாத தற்போதைய நிலையில் வாகன வகை மாற்றம் கோரி வரும் மாற்றுத்திறனாளிகள், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து உரிய சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கும்பட்சத்தில் பதிவு அதிகாரிகள் மற்றும் உதவிப் பதிவு அதிகாரிகள் இருவரும் இணைந்து அவ்வாகனத்தை ஆய்வு செய்து, மாற்றுத் திறனாளிகளால் வகைமாற்றம் செய்யப்பட்ட வாகனம் மாற்றுத் திறனாளிகளால் எளிதில் கையாளக்கூடியதாக உள்ளதா மற்றும் பாதுகாப்பான தாக உள்ளதா என உறுதி செய்து அவ்வகை வாகனங்களுக்கு வகைமாற்ற மேற்குறிப்புகள் வழங்குமாறும், மேற்குறிப்புகள் வழங்கப்பட்ட வாகனங்களை இயக்கும் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ஒட்டுநர் உரிமம் வழங்குமாறும் இதுபோன்ற புகார்களுக்கு இடமளிக்காவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்./சத்யபிரத சாகு,
போக்குவரத்து ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.

/உண்மை நகல்/

உதவி செயலாளர் II.

இணைப்பு: பார்வை 5ன் கடித நகல்.